# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.60/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமமூர்த்தி | மதம் | : இந்து |
| த/பெ | : ராமகிருஷ்ணம நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : நரசிம்ம நாயுடு கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**04.03.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. தாவா சொத்தை அளக்க நீதிமன்ற ஆணையர் நியமணம் கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 9 கிரைய ஆவணம் தவிர 1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் A அட்டவணை சொத்திற்கான ஆவணம் என்றால் அது என்னுடைய சொத்திற்கான ஆவணங்கள் ஆகும். எனக்கு பி அட்டவணை பாதை உரிமை உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2003ல் UDR ல் எனக்கு வழி உறுதி செய்யப்பட்டுள்ளது. 2003ல் UDR ல் எனக்கு வழி உறுதி செய்யப்பட்டுள்ளது என்று நான் கூறும் ஆவணங்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த சொத்தை தவிர வேறு சொத்துக்கள் பிரிக்கபடாத சொத்து உள்ளதா என்றால் என் அப்பாவிற்கு மொத்தம் 2 சொத்துக்கள் உள்ளது. அதை பிரிக்க வேண்டும்.

6. நான் வசதி உரிமையை இந்த வழக்கில் கேட்டுள்ளேனா என்றால் எனக்கு இது தவிர வேறு வழி இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கடையை ஒட்டி 5 அடி வழி பாதை என் சொத்தில் உள்ளது என்றாலும் அதில்தான் நான் இதுவரை நான் சென்று வருகிறேன் என்றாலும் சரியல்ல. பி அட்டவணை சொத்து முழுக்க முழுக்க பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றாலும் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் கோரும் பி அட்டவணை சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது

என்றால் இல்லை. என் பெயரில் ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி பி அட்டவணை சொத்து உட்பட அவரது சொத்துக்களுக்கு வழக்கிற்கு முன்பே சுற்றுசுவர் கட்டி பயன்படுத்தி வருகிறார் என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த பின்பு சுற்றுசுவரை நான் இடித்துவிட்டதாக பிரதிவாதி என் மீது கனகம்மாசத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் நான் இல்லாத நேரத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டார். நான் புகார் கொடுத்தேன். எந்த வழியையும் யாருக்கும் தடுக்க உரிமையில்லை என்று காவல் துறையினர் சுற்றுச்சுவரை எடுத்து வழியை கொடுத்தனர்.

7. நான் சொல்வது எல்லாம் பொய் என்றாலும் காவல் துறையினர் சுற்றுச்சுவரை எடுக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் பி அட்டவணை சொத்து எனக்கும் பிரதிவாதிக்கும் பொதுவானது என்பதற்கான எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 2 பெண் குழந்தைகள் என்றால் ஆமாம். அந்த 2 பெண் குழந்தைகள் எங்கு உள்ளனர் என்றால் ஒருவர் பெங்களூரிலும் ஒருவர் காஞ்சிபுரத்திலும் உள்ளார்கள். 2020 – 2021ல் என் அண்ணன் பிரதிவாதி மாதய்யா உடல் நிலை மோசமாகி சிம்ஸ் மருத்துவமனையில் படுத்த படுக்கையாக அனுமதிக்கப்பட்டார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டு நான் பெங்களூரில் சிகிச்சை பெற்றேன்.

8. பட்டா எண்.1560ல் புல எண்.177/12A1 பிரதிவாதி பெயருக்கு பி அட்டவணை சொத்து உட்பட பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. உண்மையில் நானும் பிரதிவாதியும் பி அட்டவணை சொத்தை பொது வழியாக ஒதுக்கியிருந்தால் அதற்கான ஆவணத்தை ஏற்படுத்தியிருப்போம் என்றால் அது ஏற்கனவே வழியாக இருந்த சொத்துதான். கடந்த 25–30 வருடங்களாக A அட்டவணை சொத்தில் சாலையை ஒட்டி உள்ள 5 அடி வழியில்தான் சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. அங்கு 5 அடி பாதையே இல்லை. பி அட்டவணை சொத்து முழுக்க முழுக்க பிரதிவாதிக்கு சொந்தமானது என்றாலும் முழு உரிமையாளருக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. பி அட்டவணை சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் பி அட்டவணை சொத்து முழுக்க முழுக்க பிரதிவாதிக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல.

9. பி அட்டவணை சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் எனவே என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. ஆகஸ்ட் மாதம் 2021ல் ஏற்கனவே இருந்த காம்பவுண்ட் சுவரை இடிக்க நான் முயற்சித்தபோது காவல் துறையினர் என்னை உரிமையியல் நீதிமன்றத்தை அணுக சொன்னதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 25 வருடங்களாக நான் அந்த வழியைதான் பயன்படுத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு என்னுடையதா என்றால் எனக்கு கண் பார்வை பிரச்சனை இருப்பதால் என்னால் அதை சொல்ல இயலாது. எனக்கு கண் பிரச்சனை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்திற்கு வடக்கு பக்கமாக கிழக்கு புறம் 5 அடி பொது வழி உள்ளது என்றாலும் அதைதான் நான் பயன்படுத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு வழியிருந்தால் அதை காட்ட முடியுமா? **(என சாட்சி கேள்வி எழுப்பினார்)**

10. பிரதிவாதியின் பிள்ளைகள் வெளியூரில் இருப்பதையும் பிரதிவாதி வயதானவர் என்பதையும் சாதகமாக எடுத்து கொண்டு நான் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிராது மாதிரி வரைபடத்திலேயே என் சொத்திற்கு உள்ள மற்றொரு பாதையை நான் காட்டியுள்ளேன் என்றாலும் வேறு பாதையே இல்லை என நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி அட்டவணை சொத்தின் மூலமாகதான் A அட்டவணை சொத்திற்கு போக முடியும் என் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் வழக்கு செலவுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)